கண்ணன் வருகின்ற நேரம் - கரை ஓரம்
தென்றல் கண்டு களித்தது பாரும்
கானத்திடை மோனக்குயில் ஓசைக்கிடையானத்தரம்
ஆனக் குழலிசை கேளும் - போன
ஆவியெல்லாம் கூட மீளும்

சல்லச் சல்ல நமிட்டோடும் நதி பாடும்
வனம் தங்கி தங்கி சுழன்றாடும் - நல்ல
துதிபாடிடும் அடியாரவர் மனமானது இது போல் என
துள்ளித்துள்ளித் குதித்தோடும் - புகழ்
சொல்லிச் சொல்லி இசைபாடும்

கண்ணன் நகை போலும் முல்லை இணை இல்லை
என்று கண்டதும் வண்டொன்றும் வல்லை - இது
கனவோ அல நனவோ என கருதாதிரு மனமே
ஒரு காலமும் பொய்யொன்றும் சொல்லேன்
எங்கள் கண்ணனன்றி வேறு இல்லேன்

தாழை மடல் நீத்து நோக்கும் முல்லை பார்க்கும்
என்ன சௌக்கியமா என்று கேட்கும் - அட
மொழி பேசிட இதுவே பொழுதெனவோ அதோ வரும் மாதவன்
முத்து முடியினில் சேர்வோம் அங்கே
மெத்த மெத்தப் பேசி நேர்வோம்.